# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:-102** **தேதி:-15.12.2011**

# மகத்தான வேலை நிறுத்தம்

அன்பார்ந்த தோழர்களே!

கூட்டு நடவடிக்கைக் குழுவின் அறைகூவலை ஏற்று BSNLஇல் இந்திய நாடு முழுவதிலும் உள்ள 2.76 லட்சம் அதிகாரிகள் மற்றும் ஊழியர்களும், 50,000 க்கும் மேற்பட்ட ஒப்பந்த ஊழியர்களும் இன்று மகத்தானதொரு வேலை நிறுத்தத்தை நடத்தி மத்திய அரசாங்கத்தையும் BSNL நிர்வாகத்தையும் எச்சரித்துள்ளார்கள்.

தமிழகத்திலும் இந்த வேலை நிறுத்தம் முழுமையாக நடைபெற்றுள்ளது. கிட்டத்தட்ட அனைத்து மாவட்டங்களிலும் அலுவலகங்களும் தொலைபேசி நிலையங்களும், சந்தாதாரர் சேவை மையங்களும் மூடப்பட்டிருந்தது. BSNLலுக்கு விருப்பம் தெரிவிக்காத ITS அதிகாரிகள் அலுவலகங்களுக்குள் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

விருப்ப ஓய்வு திட்டம் என்ற பெயராலே BSNLஇல் ஒரு லட்சம் ஊழியர்களை அனுப்புவது என்பதையும், BSNLக்கு விருப்பம் தெரிவிக்காத ITS அதிகாரிகளை இனியும் BSNLல் மாவட்ட/ மாநில மட்டங்களில் தலைமை தாங்க அனுமதிப்பது என்பதையும், ஊழியர்களின் உரிமைகளும் சலுகைகளும் பறிக்கப் படுவதையும், அரசின் தனியார் மய ஆதரவு கொள்கைகளால் BSNL நிறுவனம் நலிவுறுவதையும் இனியும் அனுமதிக்க முடியாது என்ற தங்களது மனக்குமுறலை இந்த வேலை நிறுத்தத்தில் முழுமையாக பங்கேற்று BSNL ஊழியர்களும் அதிகாரிகளும் தெரிவித்து விட்டனர்.

டிசம்பர் 15,2011 வேலை நிறுத்தத்தை மிக பிரமாண்டமான வேலை நிறுத்தமாக செய்து காட்டிய அனைத்து அதிகாரிகளையும், ஊழியர்களையும், ஒப்பந்த ஊழியர்களையும் தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கம் மனதார வாழ்த்துகிறது. பாராட்டுகிறது. அவர்களுக்கு நெஞ்சு நிறை நன்றியை உரித்தாக்குகிறது.

**<u>JAC தலைவர்களுடன் CMD இன்று சந்திப்பு:</u>**

BSNL CMD தலைமையில் நமது கூட்டு நடவடிக்கை குழுவின் தலைவர்களுடன் மீண்டும் ஒருமுறை பேச்சு வார்த்தை நடத்த வேண்டிய கட்டாயத்தை இன்றைய(15.12.2011) பிரமாண்ட வேலை நிறுத்தம் நிர்வாகத்திற்கு ஏற்படுத்தியது.

அந்தக் கூட்டத்தில் DOTக்கு விருப்பம் தெரிவித்துள்ள ITS அதிகாரிகளை விடுவிக்கும் பிரச்சனையை வெகு விரைவில் தீர்ப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வதாகவும், அதனை இரண்டு மூன்று மாதங்களுக்குள் முடித்து

விடுவதாகவும் CMD தெரிவித்தார். DOTக்கு விருப்பம் தெரிவித்துள்ள ITS அதிகாரிகள் தேர்ந்தெடுப்பு முறையின் மூலம் பழைய சேவை மூப்பையும் (Seniority) தக்க வைத்துக் கொண்டே மீண்டும் சேவையில் இணைவார்கள் என்கின்ற ஐயப்பாட்டை மறுதலித்த CMD, சேவை மூப்பையும் (Seniority) தக்க வைத்துக் கொண்டே இத்தகைய கொல்லைப் புற வாசல் வழியாக வரும் ஏற்பாட்டை ஏற்றுக் கொள்ள முடியாது என தெளிவாக்கினார். 78.2% பஞ்சப்படி இணைப்பு பிரச்சனையை BSNL இயக்குனர் குழுவின் (BSNL BOARD) பரிசீலனைக்கு அனுப்புவதாகவும் உறுதி அளித்தார். பொதுத்துறை நிறுவனங்களுக்கான இலாகா (DPE) வழிகாட்டுதல் படி நிறுவனம் நஷ்டத்தில் இயங்குகிறது என்றால் போனஸ்(PLI) வழங்க முடியாது என தெரிவித்தார். இதர கோரிக்கைகள் தொடர்பாக 12.11.2011 அன்று நிர்வாகம் தெரிவித்த அதே பதில்களை அவர் அளித்தார்.

மேலும் கால தாமதமின்றி கோரிக்கைகளை தீர்த்து வைக்க வேண்டும் என கூட்டு நடவடிக்கை குழு கடுமையாக வற்புறுத்தியுள்ளது.

<u>RLC உடன் சந்திப்பு:</u>

RLC இன்றைய தினம்(15.12.2011) அன்று மாலை கூட்டு நடவடிக்கைக் குழு தலைவர்கள், நிர்வாகத்தின் பிரதிநிதகள் ஆகியோரை சந்தித்தனர். கூட்டு நடவடிக்கைக் குழு தலைவர்கள், கோரிக்கைகளை தீர்த்து வைக்க வேண்டும் என கேட்டுக் கொண்டனர். ஆனால் நிர்வாக தரப்பில் 12.11.2011 கூறிய அதே பதிலை தெரிவித்தனர். இதனிடையே இந்த கூட்டத்தில் கலந்துக் கொண்ட முதன்மை தொழிலாளர் நல ஆணையர் (CLC), விவாதங்களுக்கு பின் 22.12.2011 அன்று அடுத்த கூட்டத்தை நடத்தலாம் என அறிவித்தார். அந்த கூட்டத்தில் பொறுப்பான மேல்மட்ட அதிகாரிகளை அனுப்புமாறு நிர்வாகத்தின் பிரதிநிதிகளுக்கு முதன்மை தொழிலாளர் நல ஆணையர் (CLC) ஆணையிட்டார்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**S.செல்லப்பா,**
**மாநில செயலாளர்.**